


இந்தக் கட்டுரைத் தொகுப்பு வேளாண்மை, வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கைகள், தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, கல்வி, அரசு சாரா நிறுவனங்கள், மதச்சார்பின்மை, மக்கள் தொகை – ஆகியவை குறித்த **மால்கம் ஆதிசேசய்யா**வின் ஆழமான, அழுத்தமான புரிதலை நமக்கு அளிக்கிறது. அவரது கூர்மையான பகுப்பாய்வு தற்போதைய சூழலுக்கும் பொருத்தமாகத் தொடர்கிறது.கல்வியாளராக, பொருளாதார வல்லுநராக மட்டுமே அதிகம் அறியப்பட்டிருக்கும் ஆதிசேசய்யா சிறந்த நிர்வாகியாக, இதழாளராக, பன்முக ஆளுமையாளராக, தொலைநோக்குத் திட்டங்களின் நாயகராக, நடுநிலைமையான ஆய்வாளராக இன்னும் முறையாக ஆய்வு செய்யப்படவில்லை என்பதற்கு முன்னோட்டமாக அமையும் நூல் இது.

வேலூரில் பிறந்த ஆதிசேசய்யா வேலூர் ஊரிஸ் கல்லூரியிலும் சென்னை லயோலா கல்லூரியிலும் படித்தவர். லண்டன் ஸ்கூல் ஆஃப் எக்கனாமிக்ஸில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பொருளியல் பேராசிரியராகத் தொடங்கிச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக உயர்ந்தவர். 22 ஆண்டுகளுக்கு மேல் யுனெஸ்கோவில் பணியாற்றியும் அதன் துணை இயக்குநர் நாயகமாக (*Deputy Director General*) விளங்கியும் இந்தியாவுக்குப் பெருமை சேர்த்தவர். அவர் நிறுவிய சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் தென்னிந்தியாவின் தலையாய சமூக ஆய்வு நிறுவனமாகத் திகழ்கிறது. திட்டக்குழுவின் முதல் துணைத்தலைவராக விளங்கித் தமிழகத்தின் வளர்ச்சிப் பாதைக்கு வழிகாட்டிய ஆதிசேசய்யா தமிழகத்தில் முறைசாராக் கல்வித் திட்டத்திற்கு வித்திட்டவராவார்.

இந்நூலின் தொகுப்பாசிரியர் **ஆ. அறிவழகன்** சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் பதிப்புத் துறையில் உதவியாளராகப் பணியாற்றுகிறார். ‘விதையாய் நீ விருட்சமாய் நான்’ (கவிதை), ‘வெள்ளந்தி மனிதர்கள்’ (சிறுகதை) ஆகிய நூல்களின் ஆசிரியர்.